# எனது சாட்சி (1) / My Testimony (1)

அன்பான சகோதர சகோதரிகளே: வணக்கம். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.
"கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு" என்பது பழமொழி.
இந்த உலகத்தில் எண்ணமுடியாத அளவிற்கு விவரங்கள் பரவிக்கிடக்கின்றன. நாம் இருக்குமிடம், வசதி, வாய்ப்புக்கள், நேரம், விருப்பங்கள், தேவைகள்,. . . போன்ற காரணங்களுக்கேற்ப நாம் ஒரு சில விவரங்களை வாசிக்கிறோம். அதிலே ஒருசிலவற்றை கடைபிடிக்கிறோம். பலவற்றை விட்டுவிடுகிறோம். (மீதியான அளவிடமுடியாத விவரங்கள் நமக்குத் தெரியாமலேயே உள்ளன.)

நமக்குத் தெரிந்த, அறிந்த விவரங்கள், நமது முன்னோர்களின் பாரம்பரிய முறைகள், கலாச்சாரங்கள் போன்ற நமது அன்றாட வாழ்க்கையின் விவரங்களை சிந்திக்கும்போது, எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு கடவுள் உண்டு என்பதும் நாம் அவரை வணங்க வேண்டும் என்பதும் நமக்கு பொதுவாக உணர்த்தப்படுகிற ஒரு கருத்து. இதற்கும் மேலாக நாம் இந்த உலகத்தைவிட்டு பிரிந்தபிறகு இன்னுமொரு வாழ்க்கை நமக்கு இருக்கிறது என்பதும் அதற்கு நமது ஆத்துமாவை காத்துக் கொள்ளவேண்டுமென்பதையும் தெரிந்திருக்கிறோம்.

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. (குறள் 247) *என்கிறது வள்ளுவரின் குறள்.*

இந்த கடவுளின் அருளைப் பெற்று நமது பாவத்தைப் போக்கி புண்ணியத்தைச் சேர்த்துக்கொள்ள எண்ணிமுடியாத காரியங்களை நாம் பாரம்பரியமாகவோ, சடங்காசாரமாகவோ, மரியாதைக்குரிய காரியமாகவோ, கடமைக்காகவோ, பயத்துக்காகவோ. . இன்னும் பல காரணத்தினாலோ செய்கிறோம். பெரும்பாலானோர் இந்த காரியங்களை செய்வதற்கு எடுத்துக் கொள்கிற நேரத்தையும் பிரயாசத்தையும் ஒப்பிடும்போது, அந்த கடவுள் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை வாசித்து சிந்திப்பதற்கு கொடுக்கிற நேரமும் பிரயாசமும் மிகக்குறைவு. (பல பேர்கள் கடவுள் வார்த்தைகளை படிக்கவோ அறியவோ முயற்சிப்பதேயில்லை.)

கடவுளுக்காக சில காரியங்களை செய்துவந்த நானும், எனது விருப்பத்தினாலும், வாய்ப்பினாலும் (பொது நூலகம் வீட்டிற்கு அருகில் இருந்ததால்) ஓரளவிற்கு படிக்க முயற்சித்தாலும் ஆன்மீக கருத்துக்களிலே ஒரு முழுமையான சமாதானத்தை காண இயலாமல் இருந்தேன். இந்த வாழ்க்கை ஒரு நிலையற்றது என்பதை உணர்ந்தவனாகவும், எனது உறவினர்களுக்காக வாழ்வதிலே ஒரு திருப்தியுடன், நான் செய்து வந்த வேலைகளில் ஆர்வத்தோடும், கடவுளைப்பற்றிய வார்த்தைகளை படிக்கவும் சிந்திக்கவும் எனக்குக் கிடைத்த நேரத்தையும் வாய்ப்பையும் உற்சாகத்தோடு பயன்படுத்தி வந்தேன்.

திருவிவிலியம் என்று சொல்லக்கூடிய பைபிளை, நான் ஒரு சில நேரங்களில் வாசித்திருந்தாலும், 1996ல், கடவுளின் அபூர்வமான, விந்தையான, தனிப்பட்ட, இணையற்ற, ஒப்பற்ற கருணையினாலே, ஒரு ஆலயத்திற்குச் சென்று அந்த வார்த்தைகளோடு கடவுளை ஆராதிக்க வாய்ப்பு கிடைத்தது.

கடவுள் நமக்கு என்ன சொல்லியிருக்கிறார் என்பதை வாசித்து சிந்திப்பதற்கு எனக்கிருந்த வாஞ்சை இந்த பைபிளை படிக்க படிக்க மிகவும் ஆச்சரியமாக எனது உணர்வுகளை உற்சாகப்படுத்தியதற்காக கடவுளுக்கு நன்றி சொல்கிறேன்.

இதுவரை நான் படித்த பல வார்த்தைகள் எனது சிந்தனையை ஆட்கொள்ளும்போது,
நான் அந்த வார்த்தைகளை இருதயத்திலே பிடித்துக் கொண்டு சிந்தித்து அளவில்லா உற்சாகமடைவேன்.
ஆனால், இந்த பைபிள் வார்த்தைகள் எனது சிந்தனையை ஆட்கொள்வதுமட்டுமல்ல,
அந்த வார்த்தைகளே என் இருதயத்தைப் பிடித்துக் கொண்டு அளவில்லா உற்சாகம் கொடுக்கிறது.
இது ஜீவனுள்ள வசனம் என்பதற்கு எனக்கு வேறு சாட்சி தேவையில்லை.

அப்படியிருந்தும், நான் பிடித்துக் கொண்டிருந்த பல வருட சிந்தனைகளினாலும், என்னைப் பிடித்துக்கொண்ட இந்த பைபிள் வார்த்தைகளின் சிந்தனைகளினாலும் ஒரு பெரிய சிந்தனைப் போராட்டம் சுமார் 2 வருடங்களுக்கு எனக்குள் நடந்தது என்று சொல்லலாம்.
முடிவில் ஜீவனுள்ள வசனமே வென்றது. இதை நான் வார்த்தைகளால் விவரிக்க இயலாது.
1998 ஜுலை மாதம் நானே கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தேன் என்று சொல்வதைவிட இந்த ஜீவனுள்ள வசனம் என்னை கடவுளுக்குள் ஒப்புரவாக்கியது என்று சொல்வதே சரி. இது என்னாலோ, மற்றவர்களாலோ ஆனது இல்லை. கடவுளின் கிருபை).

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்;
இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; (எபேசியர் 2:8)
என்கிறது ஜீவனுள்ள வசனம்.

நான் சிறுவயதிலிருந்து கடவுளுக்காக செய்துவந்த காரியங்கள், சிந்தனைகள், படித்து அறிந்த கருத்துக்கள் ஒரு முழுநிறைவுக்கு வருவதாக உணர்கிறேன். இன்னும் எவ்வளவோ காரியங்களை நான் சொல்ல விரும்புகிறேன். இதை ஒரு ஆரம்பமாக வைத்துக்கொள்ளுங்கள்.

இப்படிப்பட்ட இந்த கடவுள் வார்த்தைகளை நீங்கள் ஒவ்வொருவரும் அவசியம் படிக்கவும் சிந்திக்கவும் வேண்டுமென்பதே எனது அன்பான வேண்டுகோள்.

"கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு". நான் கற்ற ஒரு சில பைபிளின் வார்த்தைகள் என்னை கடவுளுக்குள் ஒப்புரவாக்கியிருக்கிறது என்றால், இன்னும் நான் இதை வாசிக்க வாசிக்க எந்த அளவிற்கு நான் கடவுளுடன் உள்ள தொடர்பையும் அவருக்கு ஆராதனை செய்வதையும் பரிபூரணப்படுத்தும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.. . . . வேதம் சொல்கிறது:

ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது,
அந்த வார்த்தை தேவனாயிருந்தது.
அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.
உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.
(யோவான் 1:1,4,9)

சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே <u>சமாதானத்தை</u> உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு <u>ஒப்புரவாக்கிக்கொள்ளவும்</u> அவருக்குப் <u>பிரியமாயிற்று</u>. (கொலோசெயர் 1:19-20)
என்ற என்ற வசனத்தின்படி,

கடவுள் நம்மீது வைத்திருக்கும் அளவிடமுடியாத பிரியம் என்னை ஆட்கொண்டதுபோல உங்களையும் நிச்சயம் ஆட்கொள்ளும்.
கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உங்களை ஆட்கொண்டு ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்.